மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தில் சென்னை அருங்காட்சியகத்தின் பகுதியான குழந்தைகள் அருங் காட்சியகம் ஒன்று நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Archaeological excavations in Karur

* 152 Q.—THIRU N. K. PALANISWAMY :
THIRU R. R. MUNUSWAMY :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether the State Department of Archaeology has undertaken excavations in Karur in Tiruchirappalli district?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம். இங்கு அகழாய்வு தொடர்ந்து நடந்து வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி : பரிசீலனையின் ஆரம்பத்தில் பாண்டியர் காலத்து நாணயங்களும், சேரர் காலத்து நாணயங்களும் கலந்து கிடைத்திருப்பதாகத் தகவல் வந்திருக் கிறதே, 'அந்த நாணயங்களைத் தவிர ரேர் பைண்டிங்ஸ்— அதிசயமான பொருள் கண்டுபிடிப்பு இருக்கிறதா? எதை எதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கரூர் நகராட்சியினர் நீர்த்தொட்டி அமைக்கும் பொருட்டு ஒரு சோதனைக் குழியை வெட்டினபோது மண்ணில் கறுப்பு, சிவப்பு நிறம் கொண்ட பழமையான பானை ஓடுகளும், சுட்ட செங்கற்களும் கண்டெடுக்கப்பட்டன. அதன்மேலும் இரண்டு குழிகளை தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்ந்தெடுத்து ஆய்வு நடத்தியது. அப்போது குழியில் மூன்று செப்புக் காசுகள் கண்டுபிடிக்கப் பட்டன. அவைகளில் ஒரு செப்புக்காசு ரோமானியருடைய காசாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும் இக்குழியில் ரோமானிய மதுக்குடத்தின் பகுதிகளும், சங்கு வளையல் துண்டு களும், கண்ணாடி வளையல் துண்டுகளும், சுடுமண் மணிகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இக்குழியின் தரையில் ஆழத்தில் செங்கல்லாலான தரைப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. இதில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவ்விரண்டு குழிகளிலுள்ள கட்டட அமைப்பையும்

கழிவு நீர் கால்வாயையும் நோக்கும்போது இவை ஒரு பெரிய வீட்டின் பகுதிகளாக இருந்திருக்கவேண்டுமென்று கருதப்படுகிறது. இக்குழியில் ரோமானிய மதுக்குடத்தின் கைப்பிடி ஒன்று கண்டுபிடிக்கப்பெற்றுள்ளது. இவைகளே அன்றி கல் மணிகளும், பச்சைக்கல் மணி ஒன்றும் கண்டுபிடிக்கப்பெற்றது. மழை காலம் முடிந்ததும் மேலும் இவ்விடத்தில் அகழாய்வு நடத்த தொல்பொருள் ஆய்வுத்துறை திட்டமிட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு, தமிழகத்தின் வரலாற்றை அறிய உதவும் வகையில் புத்தக வடிவில் தொகுத்து வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முழுவதும் இந்தப் பணி முடிந்த பிறகு இதில் கிடைக்கின்ற பொருள்கள் தமிழக வரலாற்றின் ஆராய்ச்சிக்கு பெரிதும் பயன்படும் என்றே கருதுகிறேன். இந்நகரை சோழர்களும் சில காலம் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கிறார்கள். சேரர்களும் தலைநகராகக் கொண்டு ஆண்டிருக்கிறார்கள் என்கிற குறிப்புகள் நம்மிடத்தில் இருக்கின்றன. அதற்கு ஒத்த வகையில் இந்த அகழாய்வுக் கண்டு பிடிப்புகளும் மேற்கொண்ட ஆராய்ச்சிக்குப் பயன்படக்கூடும்.

திரு. கு. காமாட்சி : திருச்சி மாவட்டம் புதுக்கோட்டைப் பகுதியில் அகஸ்ட் சீசர் ரோமாபுரி மன்னர்களின் காலத்து நாணயங்களும். பிறகு அபூர்வ நாணயங்களும் கிடைத்ததை, இன்றைக்கும் பிரிட்டிஷ் ம்யூசியத்தில் வைத்திருப்பதாக அறிகிறேன். அவற்றைத் திரும்பப்பெற முயற்சிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1898-லே நடந்த அந்த அகழாய்வில் 500-க்கும் மேற்பட்ட நாணயங்கள் கிடைத்தன. அவற்றைத் தொண்டைமான் அரசர் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கொடுக்க, அவர்கள் அதை பிரிட்டிஷ் மயூசியத்தில் வைத்திருக்கிறார்கள். ஒரு ம்யூசியத்தில் இருக்கும் பொருள்களைத் திரும்பப் பெறுவது என்பது சங்கடமாக இருக்கும். கேட்டுப் பெறுவது சாத்தியமாக இராது என்றே கருதுகிறேன்.